

அமரர்.

# வினைதீர்த்தபெருமாள் குப்பமுத்து தங்கசாமி

(உரிமையாளர் கண்ணாஸ் ஸ்ரோர்ஸ்)

அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலி மலர்

23.07.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்
31
-
12
-
1929



விண்
25
-
06
-
2015

# அமரர்.

# வினைதீர்த்த பெருமாள் குப்பமுத்து தங்கசாமி

(உரிமையாளர் கண்ணாஸ் ஸ்ரோர்ஸ்)

## திதி வெண்பா

'சீர் சிறக்கும் மன்மத வருட ஆனியில்
தீராத பூர்வபட்ச நவமியில் - பேறாரு
பெற்ற பெருஞ்சீமான் தங்கசாமி காளிதேவியடி
உற்றவருங் கலங்க ஏகினார் காண் '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பாச விளக்காய் இருந்து
எமையெல்லாம் நேசமோடு அரவணைத்து
சமூக சிந்தனையும் கல்வியறிவும் தந்து
ஒற்றுமையும் உயர்வும் காட்டி கண்ணை
இமை காப்பதுபோல் காத்து வந்தீர் !
பாசத்தோடும், பரிவோடும்
எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனின் திருவடிகளை
இறைஞ்சி இம்மலரைத் தாங்கள்
பாதக்கமலங்களில்
நீரோடும் கண்களோடு நெஞ்சம்
நிறைந்த பாசத்தோடும் நினைவோடும்
காணிக்கையாக்குகின்றோம்.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டாங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

# திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்

## திரு. குப்பமுத்து தங்கசாமி

### அவர்களின்

# வாழ்க்கையிலிருந்து சில துளிகள்

இவர் இந்தியாவில் திருநெல்வேலியைச் சேர்ந்த குப்பமுத்து பொன்னம்மாள் தம்பதிகளின் புதல்வராக 1929 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதி அன்று பிறந்தார் - சகோதர்களான தங்கபாண்டியன் (அமரர்), ஆனந்தபாண்டியன் (அமரர்), சகோதரியான வேல்கனி(அமரர்) ஆகியோரோடு கூடிவாழ்ந்தார்.

இவர் தனது 10 வது வயதில் இலங்கைக்கு வந்து மிகவும் பாடுபட்டு உழைத்து திருகோணமலை மாவட்டத்தில் பிரதான வீதியில் கண்ணாஸ் ஸ்டோர்ஸ் வியாபார ஸ்தாபனத்தை உருவாக்கினார். பின் கண்டி தெல்தெனியாவின் மண்ணில் ராமசாமி, விசாலாட்சி தம்பதிகளின் மகளாக பிறந்து வளர்ந்த பஞ்சவர்ணம் அவர்களை 1971ம் ஆண்டு கரம்பிடித்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து நன்மக்கள் நால்வரை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மக்கள் சிறப்புற வளர கருணையுடன் கூடிய கண்டிப்புடன் அவர்களை வளர்த்தெடுத்து உரிய வயதில் மணம் செய்வித்து கனிவுறு பேரப்பிள்ளைகளையும் கண்டு நிறைவு பெற்றார்.

தனது வாழ்வில் குலதெய்வமான காளியின் நம்பிக்கையுடன் எப்போதும் சுறுசுறுப்பாகவும், நேர்த்தியாகவும் காரியங்களை மேற் கொண்டு வாழ்ந்து 25.06.2015 வியாழக்கிழமை அன்று தனது எண்பத்து ஐந்தாவது வயதில் இல்வாழ்க்கையை விடுத்து இறைவனடி சேர்ந்தார்.

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி தேவியின் மகிமை (காயத்ரி)

இந்துமதத்தில் இருக்கு யசூர் சாமம் அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களுக்கும் தாயானவள் காயத்ரி காயத்ரியை விட மேலான சக்திவாய்ந்த விலை மதிக்க முடியாத இரத்தினக்கல் போன்ற மந்திரம் விண்ணுலகிலுமில்லை மண்ணுலகிலுமில்லை.

காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கும் போது சிறு தவறு ஏற்படினும் கஷ்டம்(விளையும்)உண்டாகும் எனும் பயம் வேண்டாம். குழந்தையின் மழலைச் சொற்களை கேட்டு தாய் இன்புறுவாளே தவிர கோபமடையமாட்டாள். அதே போன்று தான் அறியாக் குழந்தைகளான மனிதர்களாகிய யாம் உச்சரிக்கும்போது ஏற்படும் தவறுகளை கேட்டு ஜகன்மாதாவான எமது தாய் இன்புறுவாளே தவிர கோபமடைய மாட்டாள். காயத்ரி மந்திரத்தை ஜெபிப்பதால் செல்வம், ஆரோக்கியம், ஆயுள், புத்திரப்பேறு, நல்ல விவாகம் போன்ற பௌதீக சுகங்கள் கிடைக்கும். பகைமை கலகம் கிரகபீடை தோஷம், கர்மப்பிரபாவம், செய்வினை, நோய்கள் போன்றன அகலும்.

### காயத்ரியின் அட்சர தெய்வங்களும் பயன்களும்

காயத்ரி மந்திரம் 24 எழுத்துக்களைக் கொண்டுள்ளது. இந்த ஒவ்வொரு எழுத்தும் பிரபஞ்சத்தின் ஒரு அமைப்பையும், மனித (பிராணிகளின்) உடலமைப்பின் தத்துவத்தையும் விளக்குகிறதென முன்பு கண்டோம். 24 எழுத்துக்களுக்குரிய தேவதைகளையும் அவைகளின் காயத்ரி சக்தியை விழிப்பிப்பதால் பெறக்கூடிய நன்மைகளையும் ஆராய்வோம்.



Digitized noolahar

கணேசன்:- இதன் காயத்ரி சக்தியை விழிப்படையச் செய்வதால் கஷ்டமான காரியங்கள் வெற்றியடையும், இடையூறுகள் மறையும், அறிவும் வளரும் அடுத்து வருபவைகளுக்கும் இதன் காயத்ரி சக்தியை விழிப்பிப்பதாலாகும் பயன்கள் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

நரசிம்மன் :- வீரம், பராக்ரமம், பகைமை, அழிவு விபத்துகளில் இருந்து காப்பாற்றப்படல்.

விஷ்ணு : நல்ல வாழ்வு, தன் நன்னிலை கெடாமலித்தல்

சிவன் : தனக்குத் தேவையில்லாமல் தன்னில் இருக்கும் குற்றம். குறைகள் அழிதல், ஆன்ம ஞானம் பெறும் இச்சை அதிகமாதல்.

கிருஷ்ணன் :- எந்தக் காரியத்தையும் திறமையுடன் செய்தல், கர்ம யோகியாதல், அழகு பெறல்.

ராதை :- அன்பு வளர்ச்சி, வெறுப்புத்தன்மை, மறைதல்

லஷ்மி :- செல்வம், புகழ், போக பாக்கியங்கள் சேரல்.

அக்கினி :- சக்தி, ஒளி, தேஜஸ், பலரின் புகழ்ச்சிக்கு ஆளாதல்

இந்திரன் :- பேய், பிசாசு, சேஸ்டை பற்றாமை, திருடர் பயமில்லாமை

சரஸ்வதி :- நல்லறிவு வளர்ச்சி, கல்வியின் மேன்மை, கூஷ்ம திருஷ்டி முதலிய சாதனைகளில் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா :- தொல்லைகள், சச்சரவுகள் விலகல், கெட்டவர்களை அடக்குதல், கர்வம் அடங்குதல்

ஆஞ்சனேயர் :- கடமையை எவ்வித எதிர்ப்புக்குமிடையில் செய்து முடித்தல் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருத்தல், பிரம்மச்சர்யம் மேற்கொள்ளல்

பூமாதேவி :- பொறுமை, மன்னிப்புத்தன்மை

சூரியன்:- நீண்ட ஆயுள், ஆரோக்கியம், உடல் சக்தி

ராமன் :- எத்தகைய துன்பங்களையும் சகிக்கும் தன்மை நட்பு, அறம் பாலித்தல், மரியாதை

சீதா :- பவித்ரம், கலக்கமில்லாமை, பணிவு மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை.

சந்திரன் :- தொல்லைகள் மாறல், கோபம், ஆத்திரம் முதலியவை அடங்கிப்போதல்.

யமன் :- நேரத்தை நல்ல விதமாய் பயன்படுத்தல், மரணத்துக்கு அஞ்சாமை, எப்போதும் சோம்பலின்றிச் சுறுசுறுப்பாயிருத்தல்.

பிரம்மா:- புதுமையைச் செய்யும் அறிவு, பயிர்த்தொழில் செழித்தல், தாவரங்கள் நன்கு வளர்தல்.

வருணன்:- கலைகளில் பற்று, எளிமையாயிருத்தல், தயை, கவி செய்யும் திறமை, வளர்தல், ஏழை எளியவர்கள் பால் இரக்கம் கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணன்:- பிறருக்கு நல்வழி காட்டும் தன்மை, சீரிய ஒழுக்கம், உயர்ந்த எண்ணம், காரியத்தையும் திறமையுடன் செய்தல்.

ஹயக்ரீவன்:- தைரியம், வீரியம், உற்சாகம், துன்பங்களை அஞ்சாமல் அவற்றை எதிர்த்துப் போக்க முயற்சித்தல்.

அன்னம் :- பரந்த புகழ், எப்போதும் சந்தோசமாயிருக்கும் தன்மை முற்காலமறியும் தன்மை, பொய்-மெய்களை பகுத்தறிதல், நல்லோர் நேசம், நல்ல உணவுப்பழக்கம்.

துளசி:- மக்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வம், பெபோதும் உண்மையைப் பேசல், பிறரின் துன்பங்களைப் போக்கும் முயற்சி.

சாதகரே! இப்போது சொல்லப்பட்ட குணங்களில் ஏதாவ தொன்று நமக்குள் வரவேண்டுமானால், என்ன செய்ய வேண்டும். அந்த குணங்களுக்குரிய தெய்வத்துடன் காயத்ரியைச் சேர்த்து ஜெபம் செய்து வரவேண்டும். உதாரணமாக நமக்கு எந்தக்காரியத்தையும் திறம்பட நடத்தும் பண்பு வரவேண்டுமானால். இந்தக் குணத்துக்கு உரித்தான நாராயண நாமத்துடன் நாராயண காயத்ரியைச் சேர்த்து ஜெபம் செய்து வரவேண்டும். முக்கிய காயத்ரி சாதனை செய்து சோதனையில் வெற்றியடைந்திருந்தால் இந்த ஜபங்களைப் பல நாட்களுக்குக் செய்ய வேண்டியதில்லை. வேண்டுமானபோது இந்த ஜெபத்தைச் செய்தால் போதும். அதன் தன்மை நம்மில் வந்துவிடும். அடுத்த பாடத்தில் இந்த 24 தெய்வ காரியத்தை விளக்குவோம்.

அருள்!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ காயத்ரிகள்

**கணேச காயத்ரி :-**

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி, தன்னோ புத்தி ப்ரசோதயாத்.

**நரசிம்ம காயத்ரி :-**

ஓம் உக்ர ந்ருசிம்ஹாய வித்மஹ வஜ்ர நகாய தீமஹி, தன்னோ ந்ருசிம்ஹ ப்ரசோதயாத்.

**விஷ்ணு காயத்ரி :-**

ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்.

**சிவ காயத்ரி :-**

ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே மஹாதேவாய தீமஹி, தன்னோ ருத்ர ப்ரசோதயாத்.

**ராதா காயத்ரி :-**

ஓம் வருஷபானுஜாய வித்மஹே க்ருஷ்ண ப்ரியாயை தீமஹி, தன்னோ ராதா ப்ரசோதயாத்.

**கிருஷ்ண காயத்ரி :-**

ஓம் தேவகீ நந்தனாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தன்னோ க்ருஷ்ண ப்ரசோதயாத்.

**லஷ்மி காயத்ரி :-**

ஓம் மஹாலஷ்மியை வித்மஹே விஷ்ணு ப்ரியாயை தீமஹி, தன்னோ லஷமீ ப்ரசோதயாத்.

**அக்னி காயத்ரி :-**

ஓம் மஹாஜ்வாலாய வித்மஹே, அக்னி தேவாய தீமஹி, தன்னோ அக்னி ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த்ர காயத்ரி :-**

ஓம் ஸஹஸ்ர நேத்ராய வித்மஹே வஜ்ர ஹஸ்தாய தீமஹி, தன்னோ இந்த்ர ப்ரசோதயாத்.

**சரஸ்வதி காயத்ரி :-**

ஓம் ஸ்ரஸ்வத்யை வித்மஹே ப்ரஹ்ம பத்னியை தீமஹி, தன்னோ தேவீ ப்ரசோதயாத்.

**துர்கா காயத்ரி :-**

ஓம் கிரிஜாயை வித்மஹே சிவப்ரியாயை தீமஹி, தன்னோ துர்கா ப்ரசோதயாத்.

**அனுமன் காயத்ரி:-**

ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே வாயு புத்ராய தீமஹி, தன்னோ மாருதி ப்ரசோதயாத்.

**பூமா தேவி காயத்ரி :-**

ஓம் ப்ருத்வீ தேவ்யை வித்மஹே ஸஹஸ்ர மூர்த்தியை தீமஹி, தன்னோ ப்ருத்வீ ப்ரசோதயாத்.

**சூர்ய காயத்ரி :-**

ஓம் பாஸகராய வித்மஹே திவாகராய தீமுஹீ, துனுனுர் ஸுர்ய ப்ரசோதயாத்.

**ராம காயத்ரி :-**

ஓம் தசரதாத்மஜாய வித்மஹே, ஸீதா வல்லபாயை தீமஹி, தன்னோ ஸுர்ய ப்ரசோதயாத்.

**சீதா காயத்ரி :-**

ஓம் ஜனக நந்தின்யை வித்மஹே பூமிஜாயை தீமஹி, தன்னோ ஸீதா ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்த்ர காயத்ரி :-**

ஓம் க்ஷீர புத்ராய வித்மஹே அம்ருத தத்வாய தீமஹி, தன்னோ சந்த்ர ப்ரசோதயாத்.

**யம காயத்ரி :-**

ஓம் ஸூர்யபுத்ராய வித்மஹே மஹாகாலாய தீமஹி, தன்னோ யம ப்ரசோதயாத்.

**ப்ர ஹ்ம் காயத்ரி :-**

ஓம் சதுர்முகாய வித்மஹே ஹன்ஸாரூடாய தீமஹி, தன்னோ ப்ரஹ்ம ப்ரசோதயாத்.

**வருண காயத்ரி :-**

ஓம் ஜல விந்தாய வித்மஹே நீல புருஷாய தீமஹி, தன்னோ வருண ப்ரசோதயாத்.

**நாராயண காயத்ரி :-**

ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹ, தன்னோ நாராயண ப்ரசோதயாத்.

**ஹயக்ரீவ காயத்ரி :-**

ஓம் வாணீஸ்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹி, தன்னோ ஹன்ச ப்ரசோதயாத்.

**ஹன்ச காயத்ரி :-**

ஓம் பரமஹன்ஸாய வித்மஹே மஹா ஹன்சாயா தீமஹி, தன்னோ ஹன்ச ப்ரசோதயாத்.

**துளசி காயத்ரி :-**

ஓம் ஸ்ரீ துளஸ்யை வித்மஹே விஷ்ணு ப்ரியாயை தீமஹி, தன்னோ வ்ருந்தா ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்கள்

நவக்கிரகங்களைச் சுற்றிவரும் பொழுது ஒவ்வொரு சுற்றுக்கும் ஒவ்வொரு கிரகத்தின் காயத்திரியைச் சொல்ல வேண்டும். ஒன்பது சுற்றுக்கும் ஒன்பது கிரகத்தின் காயத்ரியைச் சொல்ல வேண்டும். முதலில் சூரிய காயத்ரியைச் சொல்ல வேண்டும்.

**சூரியன்**

ஓம் அச்வத் வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹி
தந்தோ சூர்ய ப்ரசோதயாத்

**சந்திரன்**

ஓம் பத்மத்வஜாய வித்மஹே
ஹேம ரூபாய தீமஹி
தந்தோ சோம ப்ரசோதயாத்

**அங்காரகன்**

ஓம் வீரத்வாஜாய வித்மஹே
விக்ந ஹஸ்தாய தீமஹி
தந்தோ பௌம ப்ரசோதயாத்

**புதன்**

ஓம் கஜத்வஜாய வித்மஹே
கச ஹஸ்தாய தீமஹி
தந்தோ புத ப்ரசோதயாத்

**குரு**

ஓம் வ்ருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்தோ குரு ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுக்கிரன்**

ஓம் அச்வத் வஜாய வித்மஹே
தனுர் ஹஸ்தாய தீமஹி
தந்தோ சுக்ர ப்ரசோதயாத்

**சனீஸ்வரர்**

ஓம காகத் வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தந்தோ மந்த ப்ரசோதயாத்

**ராகு**

ஓம் நாகத் வஜாய வித்மஹே
பத்ம ஹஸ்தாய தீமஹி
தந்தோ ராகு ப்ரசோதயாத்

**கேது**

ஓம் அச்வத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தந்தோ கேது ப்ரசோதயாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கடி மனம் சஞ்சலப்படுகின்றது என்றால் கடவுளிடம் என்ன பிரார்த்திக்கலாம் சஞ்சலம்படும் மனதை அடக்கிட உதவும் மந்திரம்

'அநாயா சேன மரணம், வினாதைன் யேன ஜீவனம்
தேயீமே க்ருபயா சம்போ த்வயி பக்திம அசஞ்சலாம்'

பொருள்!

இறைவன் ஆயாசமும், பயமும் இல்லாத மரணம் ஏழ்மை இல்லாத பிழைப்பு, மாறாத பக்தி இவற்றைக் கொடு

என் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்திடாமல் உன்னையே நினைக்கும் படிச் செய்திடு. என ஆண்டவரிடம் கேளுங்கள்

### குங்குமம்

- கட்டை விரலையும், ஆள்காட்டி விரலையும் சேர்த்து குங்குமத்தை வைத்தால் உங்கள் சக்தி பெருகும்.
- ஆள்காட்டி விரலால் குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்தால் சுதந்திரமாக இருப்பீர்கள்.
- குங்குமத்தை நடுவிரால் எடுத்து நெற்றியில் வைத்தால் உங்களுக்கு ஆயுள் கூடும்.
- மோதிர விரலால் எடுத்து வைத்தால் உடல் நலம் முன்னேறும்.
- சுண்டு விரலால் மட்டும் குங்குமம் வைக்கக்கூடாது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளமுடன் வாழ தினசரி வாழ்வில் சொல்ல வேண்டிய மந்திரங்கள்

1) **ஸ்ரீ வல்லப மஹா கணபதி மந்திரம்**

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
க்லௌம் ஓம் கணபதயே வர
வரத சர்ப ஜனம்மே
வசமானய ஸ்வாஹா

2) **காயத்ரி மந்திரம்**

ஓம் த்தபுருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்

3) **கேது தோஷம் விலக 21 முறை தினமும் சொல்லவும்**

ஸ்ரீ கணபதி
ஓம்
தத்புருஷாய வித்மஹே
வக்ர - துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

4) **ஸ்ரீ சுப்ரமண்யர்**

(செவ்வாய் தோஷம் விலக 51 - முறை தினமும் சொல்லவும்)
ஓம்
தத்புருஷாய வித்மஹே
மஹாசே நாய தீமஹி
தந்நோ ஷண்முக ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) **ஸ்ரீநத்ரர் (சிவன்)**

(நவக்ரஹ தோஷம் விலக 11 முறை தினமும் சொல்லவும்)

ஓம்

தத்புருஷாய வித்மஹே

மஹா தேவாய தீமஹி

தந்நோ நத்ர ப்ரசோதயாத்

6) **நரசிம்மர்**

(எதிரிகளை வெள்ள 11 முறை தினமும் சொல்லவும்)

ஓம்

வஜ்ர நாகாய வித்மஹே

திஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி

தந்நோ நரசிம்ஹ ப்ரசோதயாத்

7) **ஸ்ரீ ராமர்**

(துன்பங்கள் நீங்க தினமும் 11 முறை சொல்லவும்

ஓம்

தசரதாய வித்மஹே

சீதா வல்லபாய தீமஹி

தந்நோ ராம ப்ரசோதயர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) **ஸ்ரீ துர்க்கா**

(ராகு பகவான் தோஷம் நீங்க 11 முறை ராகுகாலத்தில் சொல்லவும்)

ஓம்

காத்யாய நாய வித்மஹே

கன்யகுமாரி தீமஹி

தந்நோ துர்கி ப்ரசோதயாத்

9) **ஸ்ரீ மகாவிஷ்ணு**

(சகல சௌபாக்கியங்கள் பெற 11முறை தினமும் சொல்லவும்

ஓம்

நாராயணாய வித்மஹே

வாசுதேவாய தீமஹி

தந்நோ விஷ்ணு ப்ரசோதயாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


**அமரர்**

**திரு. சுப்பமுத்து தங்கசாமி**

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வலயங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை காட்சி படுத்திய நிறுவனத்திற்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர் அயலவர் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்

**- குடும்பத்தினர் -**

**மகன், மகள்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**




- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**அமரர்.**

**வினைதீர்த்த பெருமாள் குப்பமுத்து தங்கசாமி**

**ராமசாமி + சாலாட்சி** ↓

- கனகையா (அமரர்)
- சிவச்சந்திரன் (அமரர்)
- திருவாசகம்
- புவனேஸ்வரன்
- நித்தியானந்தன்
- சரசம்மா
- பஞ்சவர்ணம் (அமரர்)
- சரமணி
- சிவபதி
- லோகவசியம்

**குப்பமுத்து + பொன்னம்மாள்** ↓

- தங்கபாண்டியன் (அமரர்)
- ஆனந்தபாண்டியன் (அமரர்)
- **தங்கசாமி**
- வேல்கனி (அமரர்)

பஞ்சவர்ணம் (அமரர்) — தங்கசாமி ↓

- ராதாகிருஷ்ணன் (அமரர்)
- கோகிலவாணி + கோபால் (கொழும்பு) → லோச்சனா, ரக்ஸ்சனா
- விலாசினி + செல்வகுமார் (மாத்தளை) → விபிலாஸ்
- கோபிகிருஷ்ணா (கண்ணாஸ் ஸ்ரோஸ், (திருமலை)

\+

அனுஷி

↓


அக்ஷியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org